



வரையறுக்கப்பட்ட கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கன மற்றும் கடன் வழங்கும் சங்கமானது, நாட்டின் கல்விச் சேவையில் ஈடுபட்டுள்ளவர்களின் உறுப்புரிமையைக் கொண்டு உருவாக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சிக்கன மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் ஒரு கூட்டுறவுச் சங்கமாகும்.

சங்கத்தின் பிரதான காரியாலயம் மற்றும் கிளைக் காரியாலயங்களில் நிலவும் பின்வரும் பதவியிட வெற்றிடங்களுக்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக, **வெளி விண்ணப்பதாரர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2026-11-26 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ பின்வரும் விலாசத்திற்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரில் பெற்றோ பிரதான தலைவருக்குக் கிடைக்கக் கூடிய வகையில் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், இவ்விளம்பரத்தில் உள்ள QR குறியீட்டைப் பயன்படுத்தி ஒன்லைன் முறையிலும் விண்ணப்பிக்க வேண்டும். (QR குறியீட்டைப் பயன்படுத்தி ஒன்லைன் முறையில் மாத்திரம் விண்ணப்பிப்பது போதுமானதல்ல).

(கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய அனைத்து மாவட்டங்களினதும் பிரதான நகரங்களில் சங்கத்தின் கிளைக் காரியாலயங்கள் அமைந்துள்ளன.)

இதற்காகத் திறமையான, உற்சாகமான மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய தகைமையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிரதம பயிற்சி உத்தியோகத்தர் (பதவி நிலைச் சேவைப் பிரிவு SG- III தரம்)

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் கல்வி / வணிக முகாமைத்துவம் / மனித வள முகாமைத்துவம் / சமூகவியல் தொடர்பான பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பயிற்சித் துறையில் உள்ள பதவியில் 02 வருட அனுபவம்.

அல்லது

2. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன், மனித வள முகாமைத்துவம் / கல்வி ஆகிய துறைகள் தொடர்பில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், தொடர்புடைய துறையில் 03 வருட அனுபவம்.

அல்லது

3. ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கத்தின் உதவிப் பயிற்றுவிப்பாளர் பதவியின் II ஆம் தரத்தில் 10 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 46,200 - 575 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01

மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ தமிழ்) (பதவி நிலைச் சேவைப் பிரிவு SG - III தரம்)

1. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன், இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் கணிதம், மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் அனுமதி பெற்ற அல்லது நீதி அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட சத்தியப்பிரமாணம் செய்த மொழிபெயர்ப்பாளராக இருப்பதுடன், தொடர்புடைய துறையில் 01 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 46,200 - 575 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01

விடுமுறை விடுதிப் பொறுப்பாளர் (பதவி நிலைச் சேவைப் பிரிவு SG - III தரம்)

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் தங்குமிட முகாமைத்துவம் / ஹோட்டல் முகாமைத்துவம் ஆகிய பாடங்களில் ஒன்றைக் கொண்ட அல்லது பதவியின் கடமைகளுக்குப் பொருத்தமான பாடமொன்றை உள்ளடக்கிய பட்டத்துடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய பதவியில் 02 வருட அனுபவம்.

அல்லது

2. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன், தங்குமிட முகாமைத்துவம் / ஹோட்டல் முகாமைத்துவம் ஆகிய பாடங்களில் ஒன்றைக் கொண்ட அல்லது பதவியின் கடமைகளுக்குப் பொருத்தமான பாடமொன்றை உள்ளடக்கிய ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமாவை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பூர்த்தி செய்திருப்பதுடன், தொடர்புடைய துறையில் 03 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 46,200 - 575 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 04

பிரிவுத் தலைவர் (கணக்குகள்) (பதவி நிலைச் சேவைப் பிரிவு SG - III தரம்)

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வர்த்தகம் / வணிக முகாமைத்துவம் / கணக்கியல் / நிதி தொடர்பான பட்டத்துடன், தொடர்புடைய துறையில் 02 வருட அனுபவம்.

அல்லது

2. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் கணக்காய்வு / கணக்கியல் / நிதி / வங்கியியல் தொடர்பில் ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், தொடர்புடைய துறையில் 05 வருட அனுபவம்.

அல்லது

3. மேலே 1, 2 இல் குறிப்பிடப்பட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றுடன், ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கம்/ஒன்றியத்தின் தொழிற்பாட்டுச் சேவைப் பிரிவில் தொடர்புடைய துறை சார்ந்த பதவியில் 10 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 46,200 - 575 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 20

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தொழிற்பாட்டுச் சேவைப் பிரிவு O - III தரம்)

1. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன் தேசிய பயிலுநர் சபை / தொழில்நுட்பக் கல்லூரி / அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொழில்நுட்பக் கைவினை தொடர்பில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 01 வருட அனுபவம்.

அல்லது

2. இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் தேசிய பயிலுநர் சபை / தொழில்நுட்பக் கல்லூரி / அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொழில்நுட்பக் கைவினை தொடர்பில் ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 03 வருட அனுபவம்.

அல்லது

3. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவதுடன், ஆட்சேர்ப்புச் செய்யப்படும் நிறுவனத்தில் தொழில்நுட்பவியலாளர் பதவியின் I ஆம் தர ஊழியராக இருத்தல்.

சம்பள அளவு : மாதாந்தம் 38,700 - 350 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01

சேவை மேம்படுத்தல் உத்தியோகத்தர் (தொழிற்பாட்டுச் சேவைப் பிரிவு O - III தரம்)

1. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன், இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் கணிதம், மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் அங்கத்தவர் ஆட்சேர்ப்பு / சேவை மேம்படுத்தல் / வைப்பு மேம்படுத்தல் / விசேட திட்ட மேம்படுத்தல் / கடன் மேம்படுத்தல் போன்ற துறைகளில் ஒரு வருட சேவை அனுபவம்.

அல்லது

2. இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் சந்தைப்படுத்தல் அல்லது வியாபார மேம்படுத்தல் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 03 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 38,700 - 350 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை – 28

வரைகலை வடிவமைப்பாளர் (தொழிற்பாட்டுச் சேவைப் பிரிவு O - III தரம்)

1. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வரைகலை வடிவமைப்புத் தொடர்பில் ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 02 வருட அனுபவம்.

அல்லது

2. இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வரைகலை வடிவமைப்புத் தொடர்பில் ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 04 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 38,700 - 350 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01

தகவல் தொழில்நுட்ப உதவியாளர் (தொழிற்பாட்டுச் சேவைப் பிரிவு O - III தரம்)

1. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன் தகவல் தொழில்நுட்பம் (application and hardware) தொடர்பில் ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், தொடர்புடைய துறையில் ஒரு வருட அனுபவம்.

அல்லது

2. தகவல் தொழில்நுட்பம் (application and hardware) தொடர்பில் **NVQ** 4 மட்டச் சான்றிதழைப் பெற்றிருப்பதுடன், தொடர்புடைய துறையில் 02 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 38,700 - 350 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 10

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (கணக்குகள்) (தொழிற்பாட்டுச் சேவைப் பிரிவு O - III தரம்)

1. வர்த்தகப் பிரிவில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன், இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் கணிதம், மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல்.

அல்லது

2. கணிதம், மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் AAT 2 ஆம் கட்டத்தில் சித்தியடைதல் அல்லது பட்டயக் கணக்காளர் முதலாம் கட்டத்தில் சித்தியடைதல்.

அல்லது

3. வர்த்தகப் பிரிவில் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவதுடன், அலுவலகப் பண உதவியாளர் பதவியின் I ஆம் தரத்தில் 05 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 38,700 - 350 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 129

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (தொழிற்பாட்டுச் சேவைப் பிரிவு O - III தரம்)

1. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன், இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் கணிதம், மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல்.

அல்லது

2. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவதுடன், அலுவலகப் பண உதவியாளர் பதவியின் I ஆம் தரத்தில் 05 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 38,700 - 350 X 10.

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 98

காசாளர் (தொழிற்பாட்டுச் சேவைப் பிரிவு O - III தரம்)

1. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன், கணிதம், மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல்.

அல்லது

2. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன் தொடர்புடைய பதவியில் 03 வருட அனுபவம்.

அல்லது

3. கணிதம், மொழி மற்றும் ஆங்கிலம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் தொடர்புடைய பதவியில் 05 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 38,700 - 350 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை – 17

சமையற்கலைஞர் (தொழிற்பாட்டுச் சேவைப் பிரிவு O - III தரம்)

1. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன் அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் பாடசாலையில் தொடர்புடைய துறையில் ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 02 வருட அனுபவம்.

அல்லது

2. இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் பாடசாலையில் தொடர்புடைய துறையில் 06 மாதங்களுக்கு குறையாத பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் 05 வருட அனுபவம்.

அல்லது

3. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியுடன், ஆட்சேர்ப்புச் செய்யப்படும் கூட்டுறவுச் சங்கம்/ஒன்றியத்தின் உதவிச் சமையற்கலைஞர் பதவியில் 10 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 38,700 - 350 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 05

தொழில்நுட்பக் கைவினைஞர் (உதவிச் சேவைப் பிரிவு S.1 - II தரம்)

1. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொழில்நுட்ப நடவடிக்கைகள் தொடர்பான சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்தி செய்திருப்பதுடன், தொடர்புடைய பதவியில் ஒரு வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 35,100 - 290 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 02

சாரதி (உதவிச் சேவைப் பிரிவு S.1 - II தரம்)

1. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 06 பாடங்களில் சித்தியடைதல் மற்றும் 03 வருடப் பழைமையான கனரக வாகனச் சாரதி அனுமதிப்பத்திரத்துடன் சாரதியாக 03 வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 35,100 - 290 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை – 03

அலுவலகப் பண உதவியாளர் (உதவிச் சேவைப் பிரிவு S.1 - II தரம்)

1. இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல்.

சம்பள அளவு : மாதாந்தம் 35,100 - 290 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 20

வரவேற்பு உத்தியோகத்தர் (உதவிச் சேவைப் பிரிவு S.1 - II தரம்)

1. இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் மொழி மற்றும் ஆங்கிலப் பாடங்களில் திறமைச் சித்திகளுடன் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல்.

சம்பள அளவு : மாதாந்தம் 35,100 - 290 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை – 27

ஆவணக் காப்பாளர் (உதவிச் சேவைப் பிரிவு S.1 - II தரம்)

1. இரண்டு தடவைகளுக்கு மிகாத அமர்வுகளில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் ஒரு வருட அனுபவம்.

சம்பள அளவு : மாதாந்தம் 35,100 - 290 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 36

விடுமுறை விடுதி உதவியாளர் (உதவிச் சேவைப் பிரிவு S.2 - II தரம்)

1. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைதல்.

சம்பள அளவு : மாதாந்தம் 33,500 - 250 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 08

தொழிலாளி (உதவிச் சேவைப் பிரிவு S.3 - II தரம்)

1. 10 ஆம் தரத்தில் சித்தியடைதல்.

சம்பள அளவு : மாதாந்தம் 30,100 - 180 X 10

வெற்றிடங்களின் எண்ணிக்கை - 33

பொது நிபந்தனைகள்

- விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்குக் குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். எனினும், தற்போது கூட்டுறவுச் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவருக்கு இந்த உச்ச வயது வரம்பு ஏற்புடையதாகாது.
- மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய மாதாந்தச் சம்பளத்திற்கு மேலதிகமாக ரூ. 17,800/- வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவும், அங்கீகரிக்கப்பட்ட ரூ. 11,000/- கொடுப்பனவும் உரித்தாகும்.
- இப்பதவி நிரந்தரமானது, ஆனால் ஓய்வூதியமற்றது. நியமனம் பெறுபவர் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக 10% பங்களிப்புச் செலுத்த வேண்டும் என்பதுடன், நிறுவனத்தினால் 15% பங்களிப்புச் செய்யப்படும்.
- விண்ணப்பதாரர்கள் சுயவிபரம் மற்றும் அனைத்துக் கல்வி, தொழில் தகைமைகளையும் உள்ளடக்கி தம்மால் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட சுயவிபரத்திரட்டுடன் (CV), இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவ மாதிரிக்கு அமையத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தையும் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க வேண்டும்.